<u>குற்றவியல்நீதித்துறைநடுவர்நீதிமன்றம்எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No. 134/2019</u>

2026ம்ஆண்டு ஜுலை மாதம்08 ஆம்நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி–07, திரு.நாகராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின்ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன்,மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நாகராஜ் | வயது | : | 37/26 |
| த.பெ/ க.பெ. | : | ராஜேந்திரன் | தொழில் | : | டிரைவர் |
| ஊர் | : | பிலாஞ்சேரி | நிலை | : | LW07 / PW07 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( 3வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல்விசாரணை:</u>

நான் பிலாஞ்சேரியில் வசித்து, டிரைவர் வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் அறிவழகனுக்கும் ஜனகருக்கும் இடையே நடந்த தகராறு சம்மந்தமாக ஜெயங்கொண்டம் போலீசார் சம்பவ இடமான எங்கள் ஊர் சுடுகாட்டிற்கு வந்து விசாரித்து, கையொப்பம்

கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும்அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 ஜனகர் எனக்கு பங்காளி முறை ஆவார். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சம்பவம் இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, அ.சா.1 என் உறவினர் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/
ஒம்/—P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.